Registered No. M. 1014.

உ

ஸ்ரீ வாணி சகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் சமூகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.

வீடுபேறநில்.

வெண்டாமரை உ.	1914-ம் ஆ மே மீ	இதழ் ௫.

பத்திராதிபர் :— சி. பங்காருப் பத்தர்,
கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்
புதுவை.

வருஷ சந்தா ரூ 1		வெளிநாட்டுக்கு ரூ 2	
தபாற்கூலி அணா 4		தனி சஞ்சிகை அணா 2	

Saigon Sinnaya Press: Pondicherry.

உள்ளுறை.

பக்கம்.

ஸ்ரீ இராமகிருஷ்ண பரம ஹம்சர் சரிதம் : — ஸ்ரீமான் தி. வடிவேலுமுதலியார், திருவெண்ணெய்நல்லூர். 98

புதுவை ஸ்ரீ கிருஷ்ண வாசகசாலையின் மூன்றாவது வருஷோற்சவம் :— ஸ்ரீமான் தி. திருப்புளிசாமி ஐயர், காரியதரிசி "கலைமகள் கழகம்", புதுவை. ... 102

பாலசிக்ஷை:—ஸ்ரீமதி த. பு. அம்மணியம்மாள் B. I., புதுவை. 104

ரமணி (ஓர் காதற் கதை): — ஸ்ரீமான் சு. அ. சுப்பராயப் பிள்ளை, புதுவை. 105

மாம்ஸ பக்ஷண நிராகரணம் : — தமிழ் வித்வான், ஸ்ரீமான் ஜி. சுவாமிநாதன் ஆசாரி, கோட்டாறு. 108

சீவகசிந்தாமணி : — பத்திராதிபர். 113

நியாயமாலா : — ஸ்ரீமத் அநந்தபத்மநாபஸ்வாமிகள், காஞ்சீபுரம். 116

குருபக்தி : — ஸ்ரீமான் M. V. சுப்ரமண்ய ஐயர். ... 117

காலதேசகாரண (நிமித்த)ங்கள் :—செந்தமிழ்க்கவி, ஸ்ரீமான் K. V. இராமசந்திர அய்யர், திருவண்ணாமலை. ... 119

சமாசாரம். 120

குறிப்பு. — இப்பத்திரிகைக்குரிய விஷயங்களைப் பத்திராதிபர் அனுமதியின்றி எவரும் பிரசுரிக்கக்கூடாது.

418

Sri Ramakrishna Paramahamsa.

பிறப்பு இறப்பு என்னும் சம்சார சாகரத்தில் விழுந்து
தத்தளிக்கும் ஜீவகோடிகளை முக்தி என்னும் கரை சேர்ப்பான்
அவதரித்த ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகளுடைய குருநாதராகிய
ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸ தேவர்.

S. NARAYANA REDDY. VICTORIA PRESS, VELLORE.

419

உ

ஸ்ரீவாணிசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபெறநில்.

வெண்டாமரை ௨.] 1914-ம் ௵ மே ௴ [இதழ் ௫.

இலௌகிகப் பகுதி.

ஸ்ரீ இராமகிருஷ்ண பரம ஹம்சர் சரிதம்.

ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகளின் சரிதமாகிய அமுதை உண்டு இறுமாந்துள்ள அன்பர் பலர்க்கும், அவரது பரமாசாரியராகிய ஸ்ரீ இராம கிருஷ்ண பரம ஹம்சரின் சரிதாமிர்தத்தையும் பருக ஆவலிருக்குமாதலின், அப்பரம ஹம்சரின் சரிதத்தை ஒருவாறு இங்கு எழுத விரும்புகின்றேம்.

பங்காளத்தில் ஹூக்ளி ஜில்லாவைச்சேர்ந்த காமார்புகார் என்னும் குக்கிராமத்தில், க்ஷூதிராம் சட்டோபாத்தியாயர் என்பார் சந்த்ரமணீ தேவியெனும் தமது பத்நினியோடு இல்லறம் நடாத்திவருங்கால், அவர்கள் அருந்தவப் பயனாக இரு பெண்மணிகளும் மூன்று ஆண்மக்களு முதித்தனர். அவர்களில் இளையவரான கதாதரர் என்னும் பிள்ளைத் திருநாமமுடைய நம் ஸ்ரீ இராமகிருஷ்ணர் 1835-ம் ௵ பிப்ரவரி ௴ 20-ம் ௳ உலகுய்ய அவதாரஞ் செய்தனர். க்ஷூதிராம் சட்டோபாத்தியாயரும் சந்த்ரமணீ தேவியும் மிக்க தெய்வபக்தியுள்ளவர்கள். பகவானையும் பகவத் பக்தர்களையுமே கொண்டாடி யுபசரிப்பவர்கள்.

க்ஷூதிராம் ஒருகால் ஓர் ஊர்ப்பிரயாணம் போகையில் இடையில் தளிர்த்திருந்த வில்வமரத்தைக் கண்ணுற்று, நிரம்ப வில்வ தளங்களைப் பறித்துக்கொண்டு பகவத் பூஜார்த்தம் தமது சொந்த ஊர்க்கே திரும்பி

420

விட்டனரென்றும், சந்த்ரமணி தேவி ஸ்ரீ ராமகிருஷ்ணாது பிரதம சிஷ்யனான மதுராநாதன் பகுமானமாக ஓர் பெருந்தொகை யளிக்க வந்தபோது வாங்கிக்கொள்ளாது மறுத்துவிட்டனரென்றும் சொல்லினத உய்த்து நோக்கின், அவர்கள் பக்தியும் சுயநயமின்மையும் கூறுமலே விளங்கும். இத்தகைய சிலர்களைப் பெற்றோரா யமையப்பெற்ற கதாதரரது அறிவிற்கும், ஒழுக்கத்திற்கும், காருண்யத்திற்கும், பகவத் பக்திக்கும் வேறு ஆதாரங்கள் வேண்டுமோ? இளமை முதற்கொண்டே பூர்வ ஞானம் நிரம்பப்பெற்றவரின் மகிமையை எடுத்துரைக்கவல்லார் எவர்?

நமது சுவாமிகள் இளமைப் பருவந்தொட்டே பகவத் பக்தியுள்ளவராக, தோழர்களுடன் பகவானை ஆராதிப்பதும் பகவத் லீலைகளைத் தாமும் செய்து அனுபவிப்பதுமாக விருப்பர். இப்பருவத்திலே மகான்கள் நிறைந்த சபையில் மத விஷயமாகக் கேட்போர் மனம் பரவசப்படும்படி உபந்நியசிப்பர். இவருக்குப் பதினாறும் வயதில் உபநயனம் செய்வித்து, கல்கத்தாவில் பாடசாலை வைத்திருந்த இராம குமாரர் என்ற இவர் தமையனாரிடம் படிப்பிற்கு அனுப்பப்பட்டாரெனினும், உடன் கற்கு மாணவர்களின் நோக்கம் சாமானிய உலக வியவகாரத்தில் ஈடுபட்டிருந்தமையால் நீண்ட நாள் அவர்களோடு பழக மனமின்றிக் கல்வி கற்பதை நிறுத்திவிட்டார். இராமகிருஷ்ணர் அதிக கல்வித் தேர்ச்சியற்றவரெனினும் அவரது அரிய உபதேச மொழிகளையும் ஒழுக்கத்தையும் கண்ணுற்றால், உயர்தரக் கல்வியாளரும் இவருக் கிணையோவென ஐயுறவேண்டியிருக்கும்.

1853-ம் வருஷத்தில் கல்கத்தாவுக்குச் சமீபத்திலுள்ள தக்ஷிணேசுவரம் என்னுமிடத்தில், ராணி ராஷ்மணி என்பவளால் கட்டப்பட்ட அழகான காளி கோயிலில் இவர் தமையனார் அர்ச்சகராக விருந்தார். சூத்ர ஸ்திரீயினால் கட்டப்பட்ட மேற்படி ஆலயத்தில் நிவேதனமான பிரசாதத்தை எற்றுக்கொள்ள மனமின்றிக் கல்கத்தா வந்து சில தினமிருந்தாரெனினும், நாளடைவில் இவரே மேற்படி ஆலய அர்ச்சகராகவிருக்க நேர்ந்தது. அது முதற்கொண்டு இவருக்கு ஞான மதிகரித்துப் பகவத்பக்தி முற்றத் தொடங்கியது. இவர் பூஜித்துவந்த காளிகா தேவியே ஜகன் மாதாவென மனப்பூர்வமாய் நம்பி, பிரத்தியக்ஷமாய்க் காண வேண்டுமென இரங்குவார், பாடுவார், ஆடுவார். பலர் இவருக்குப் பித்தம் பிடித்துவிட்டதென்றும், விவாகஞ்செய்தால் ஒருவாறு தெளிவுறுமெனவும் நம்பி, இவரைக் கல்கத்தாவுக்கு அழைத்துச் சென்று ஸ்ரீ ராமசந்த்ர முகோபாத்தியாயரின் புதல்வியான ஐந்து வயதுள்ள சாரதாமணி தேவியை மணம்புரிவித்தனர். விவாக முடிந்ததும் தக்ஷிணேசுவரம் வந்து முன்

போலவே தம் அர்ச்சகத் தொழிலில் அமர்ந்தாரெனினும், இவரது பக்தி பிரேமை வைராக்யங்கள் அதிகரித்துக்கொண்டே வந்தன. அம்பிகை பிரத்தியக்ஷமாகாமை நோக்கிக் கண்ணீர் ஆறாய்ப் பெருக்கி, "தாயே ஒரு நாள் வீணாயிற்றே, நின்னைக் கண்டுகளிக்க அடியேனுக் கருள்புரிவையோ" எனத் துயருறுவார். இவரது குணம் மாறுபட்டிருப்பதாக உணர்ந்த ராஷிமணி யம்மாளின் மருமகனான மதுராநாதன் இவரை ஒரு வைத்தியரிடம் காண்பிக்க, அவர் இராமகிருஷ்ணர் மகா யோகி என்றும், அவர் உலக வியவகாரங்களுக்குப் பயனற்றவரென்றுங் கூற, அப்பொழுதுதான் எல்லோருக்கும் இவரது உண்மை நிலை வெளியாயிற்று.

இன்னம் தேவி பிரத்தியக்ஷமாகவில்லையே யென ஏங்கி நின்ற இராமகிருஷ்ணருக்கு, அம்பிகை பிரத்தியக்ஷமாகவே, ஆனந்தக் கடலிலாழ்ந்தனர். அதற் கறிகுறியாகப் பல அதிசய சம்பவங்கள் நிகழ்ந்தன. அதனால் அம்பிகைக்கும் தமக்கும் பேத மின்மை யுணர்ந்தார். மீண்டும் நிர்விகல்ப ஸமாதியை யடையவேண்டிப் பன்னிரண்டு வருடம் கடுந் தவம்புரிந்தார். இக்காலத்தில் இவர் பலவித தாபங்களையு மடைந்ததுமன்றி, அநேக ஆச்சரியக் காட்சிகளைக் கண்டு வெளிப் புலனுணர்ச்சி சிறிதுமின்றி யிருந்ததனால் இவருடம்பைப் பாதுகாப்பதே அரிதாயிற்று. இவர் மருகர் ஹ்ருதியாநந்தரின் முயற்சியினாலே இவர் தேகம் மிக்க அருமையுடன் பாதுகாக்கப்பட்டு வந்தது. இவர் தம் அகம்பாவத்தை ஒழிக்கக் கருதி, பல ஈனத்தொழிலைப் புரிந்ததுமன்றி, பொன்னாசை யொழிக்கப் பொன்னையும் மண்ணையும் இரு கரங்களிலேந்தி இரண்டிற்கும் சமத்துவங் கூறிக் கங்கையி லெறிவார். அக்கால் அங்குவந்த ஒரு பிராமண மாது இவரது தாபந் தீரும் வண்ணம் சகல வேதாந்த யோக ரகசியங்களையும் உபதேசித்தாள். சரஸ்வதிபோன்ற அவ் வம்மணியின் உபதேச மொழிப்படி யொழுகி யோக சித்தியடைந்தார். இக்காலத்தில்தான் இவர் உலகத்திற்குத் தம் அனுபவங்களை எடுத்துக்காட்டி, மானிட கோடிகளை நல்வழிப் படுத்துவாரென இவருக்கே எடுத்துரைக்கப்பட்டது. பிறகு தோதபுரி என்னும் மகாத்மா விடமிருந்து, அவர் பிரயாசைப்பட்டு நாற்பது வருடகாலமாய்க் கற்ற சித்திகளையெல்லாம் மூன்று நாட்களிலேயே கற்றுணர்ந்து குருவுக்கு மிஞ்சிய சிஷ்யராய் விளங்கினார்.

இவர் பிறகு நீடித்தகாலம் நித்திய நிர்விகல்ப ஸமாதியிலிருந்ததாகவும், அதனால் அவர் தேகம் சுஷ்கித்த பிறகே அந்நிலையிலிருந்து வெளிப்புல னறிவைப்பெற்றதாகவும் இவரே கூறியுள்ளார். பின்னர் வைஷ்ணவ, மகம்மதிய, கிறீஸ்தவ மதங்களிலுள்ள உண்மைக் கருத்துகளை அவ்வம் மதத்திற்குரிய ஆசாரியர்கள் மூலியமாய் உணர்ந்தார்.

பக்தி மார்க்கத்தைப் பின்பற்றி எந்த தேவதையைத் தியானித்தாலும் அவைகள் பிரத்தியக்ஷமாகி இவரிலேயே லயித்துவிடுகிறதைக் கண்ட இவர், ஜீவாத்ம பரமாத்மாக்களுக்குள் பேதமில்லையெனத் தெளிந்தார். பிரமம் ஒன்றேயென் றும், அதையே ஒவ்வொரு மதத்தினரும் ஒவ்வொரு வடிவமாக ஆராதிக்கின்றனரென் றும், ஆகையால் எல்லா மதங்களும் சமமே என்றும் தம் அனுபவத்தினாலேயே நிலைநாட்டினார். இவர் மணஞ் செய்துகொண்ட பாலிகையான ஸ்ரீ சாரதாமணி தேவிக்கு வயது 18 ஆயிற்று. தன் கணவன் இருக்கும் நிலையைக் கேள்விப்பட்டு, தானே அவரைப் போய்ப் பார்க்கும்பொருட்டு, தன் பெற்றோரிடம் செலவு பெற்றுக்கொண்டு, 80 மைல் தூரம் நடந்து தக்ஷிணேசுவரத்தை யடைந்து தன் கணவனைத் தரிசித்தலும், எல்லா ஸ்திரீகளையும் தேவியின் அம்சமாக மதித்து வந்த ஸ்ரீ இராமகிருஷ்ணர் தம் கருத்தை வெளியிட்டு நமஸ்கரிக்க, ஸ்ரீ சாரதாமணி தேவி தன் கணவர் உள்ளக் குறிப்பை யுணர்ந்து அவர் அருகிலிருந்துகொண்டே அவருக்குப் பணிவிடை செய்துவரும் பாக்கியத்தை யருளும்படி வேண்டி, அவருடைய பிரதான சிஷ்யையாயமர்ந்தனள். ஸ்ரீ இராமகிருஷ்ணர் எல்லா ஜனங்களுக்கும் நல்லுபதேசம் செய்வாராயினார். இச் சமயத்தில் இவர் அன்பார்ந்த சிஷ்யனான மதுராந்தன் இவரையும் அழைத்துக்கொண்டு க்ஷேத்திர யாத்திரை செய்து, காசி, பிருந்தாவனம் முதலிய இடங்களில் அநேக மகா யோகிகளைக் கண்டு உரையாடி ஆங்காங்குள்ள மகிமையைக் கொண்டாடித் திரும்புங்கால், வறுமைப் பிணியால் வருந்திய ஒரு குக்கிராம வாசிக்கு உதவிபுரிந்து பின்னர்த் தக்ஷிணேசுவரம் வந்து சேர்ந்தார்.

பின்னர், தாம் உலகிலுள்ள வரையில் தக்ஷிணேசுவரத்திலிருந்துகொண்டே பண்டிதன் முதல் பாமரனீறாகச் சகலருக்கும் பிரம்ம ஞானோபதேசம் செய்துவந்தார். ஆனால் இவரைப்பற்றி, ஸ்ரீ கேசவ சந்த்ர ஸேனர் வெளியிடு முன்னம், வெகுவாய் ஜனங்களுக்குத் தெரியாது. எல்லாவிதத்திலும் மேலான மதமொன்றை யவலம்பித்து வந்தவரென்று கருதப்பட்ட ஸ்ரீ கேசவ சந்த்ரஸேனர் இவரைப் பூஜித்தனரென்றால், இவர் பெருமையையுங் கூறல் வேண்டுமோ! ஆனாலும் இவரது பிரதான சிஷ்யரும், இவரது உபதேச மொழிகளை உலக முழுமையும் பரவச் செய்வதற் கறிகுறியாய் மேனாடுகளுக்குச் சென்று பாரத வர்ஷ ப்ராசீன மகிமையை எடுத்து முழக்கி வேதாந்த கர்ஜனம் செய்தவருமான ஸ்ரீமத் ஸ்வாமி விவேகாநந்தரும் அவரது சகாக்களுமே இவரது பெருமையை நிலைநிறுத்தவந்த புண்ய புருஷர்களாவர். தம்மைத் தரிசிக்க வருபவர்களுடன் பேசி நல்லுபதேசம் செய்து காலத்தை ஆனந்தமாய்க்

க்ஷித்து, 1886-ம் ஞு ஆகஸ்டு மீ 16-ம் உ இரவு 10 மணிக்கு ஸமாதியிற் சேர்ந்து பரப்ரம்மத்தில் இரண்டறக் கலந்தனர். இவருடைய சிஷ்ய கோடிகள் நாளதுவரையில் இவர் கொண்டிருந்த ஒழுக்கங்களைப் பின்பற்றி, இவர்போலவே பரோபகாரிகளாய் ஆங்காங்கிருந்து விளங்குகின்றனர். சுபம்.

தி. வடிவேலுமுதலியார்,

திருவெண்ணெய்நல்லூர்.

புதுவை ஸ்ரீ கிருஷ்ண வாசகசாலையின் மூன்றாவது வருஷோற்சவம்.

இவ் வருஷோற்சவம் ஆநந்த ஞு சித்திரை மீ 28-ம் உ ஆதிவாரம் மாலை 6 மணி முதல் $8\frac{1}{2}$ மணி வரையில், புதுவைக் காளத்தீசுவரர் கோயில் வீதி 16-ம் நெம்பர் கிருகத்தில், புதுவை ஸ்ரீ கிருஷ்ண ப்ரம்ஹ வித்தியாசாலையின் அக்கிராசனாதிபதி ஸ்ரீமாந் இரகுநாத-பெரியசாமிப் பிள்ளை யவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது.

அக்காலை அநேக வித்துவ சிரோமணிகளும் பல கன தனவான்களும் குழுமியிருந்தனர்.

அக்கிராசனாதிபதியவர்கள் வரவேற்புபசரிப்புக் கூறி யமர்ந்தனர்.

பின்னர், அழைப்புப் பத்திரத்திற் கண்டபடி சங்கீதம் நடைபெற்றது. உடனே வாசகசாலையின் மானேஜரும், புதுவைக் கலோனியல் காலேஜ் உபாத்தியாயருமாகிய ஸ்ரீமாந் R. A. பொன்னுசாமி முதலியாரவர்கள் வருடாந்த அறிக்கைப் பத்திரம் வாசித்து முடிந்ததும், புதுவைக் கலோனியல் காலேஜ் தமிழ் – ஆங்கில உபாத்தியாயர் ஸ்ரீமாந் V. S. சுவாமிநாத தீக்ஷிதர் B. A. L. T. அவர்கள் "புஸ்தகசாலையும், வாசகசாலையும்" என்ற விஷயத்தை யெடுத்துக்கொண்டு, உலகத்தில் மனிதர்கள் அடையவேண்டியது தருமார்த்த காம மோக்ஷமென்னும் சதுர்வித புருஷார்த்தங்களென்றும், அவற்றுள் பொருளே முக்கியமானதென்றும், அதனால் மற்றைய தருமம் காமம் மோக்ஷம் என்னு மூன்றையும் அடையலாமென்றும், அப்பொருளைச் சம்பாதிப்பதற்கு அறிவுவேண்டுமென்றும், அவ்வறிவைப் பெறுதற்கு நான்கு வழிகளுள்ளனவென்றும், அவை குரு, கேள்வி, புத்தகம், பத்திரிகையென்றும், அவற்றுள் குருவினாலும் கேள்வியினாலும் அறிவைப் பெறக்கூடிய சந்தர்ப்பங்கள் கிடைப்பது அருமை

424

யாகையால் புத்தகங்கள் பத்திரிகைகள் வாயிலாகவே அறிவைப் பெறுதல் சுலப சாத்தியமென்றுங் கூறி, அப் புத்தகங்களையும், பத்திரிகைகளையும் பொருளுபகரித்து வாங்கி வாசித்தல் எல்லோர்க்கு மியலாதாதலின், பரோபகாரார்த்தமாகச் சேமித்து வைத்துள்ள இத்தகைய புத்தகசாலையும், வாசகசாலையுமே எத்தகையோர்க்கும் எவ்விதத்தினும் பயன்றருமெனப் பல திருஷ்டாந்த வாயிலாகக் கேட்போர் மனம் களிப்புறுமாறு உபங்யசித்தார்கள்.

பிறகு புதுவைக் கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதரும், 'கலைமகள்' பத்திராதிபரு மாகிய ஸ்ரீமாந் சி. பங்காருப்பத்தரவர்கள் "நல்லோர் இணக்கம்" என்ற விஷயத்தை யெடுத்துக்கொண்டு, அதனை நல்லோரியல்பு, அவர்களோடிணங்க வேண்டுதலின் ஆவசிகம், இணங்குதலின் பயன் என்று மூன்று வகையாகப் பிரித்துக்கொண்டு, எல்லா நற்குணங்களும் நிறையப்பெற்றவரே நல்லோரென்றும், நிஷ்காரணமாகப் பிறர்க்கு நன்மைசெய்வதே அவர்களியல்பென்றும், நிலத்தியல்பால் நீர் திரிந்தாற்போல நமது அறிவு சேர்ந்த இனத்தின் றன்மையை அடைகின்றபடியினாலே நாம் நல்லறிவு பெறுதற்கு நல்லோரிணக்கம் நமக்கு வேண்டுவது ஆவசிகமென்றும், அவர்க ளிணக்கத்தால் அறியாமை நீங்கி இகத்தில் பல நன்மைகளை யடைகின்றோமென்றும், பரலோக இன்பமும் அவர்க ளிணக்கத்தாலேயே சித்திக்கக்கூடியதென்றும், கேட்போருள்ளத்துப் பசுமரத் தாணிபோல விஷயங்கள் ஆழ அமையுமாறு, அரிய பெரிய பிரமாணங்களைக்கொண்டு, சுருதி யுக்தி அநுபவ வாயிலாகச் சொற்சுவை பொருட்சுவை தோன்ற உபங்யசித்த அருமை எம்போலியர் புகலுந்தரத்ததோ!

பின்னர் அக்கிராசனாதிபதியவர்கள் உபங்யாசகர்களுக்கும், சபையினர்க்கும் வந்தனோபசாரஞ் சொல்ல, சங்கீதத்தோடு வருஷோற்சவம் பூர்த்தியடைந்தது.

அறிஞர் பலருஞ் சேர்ந்து இக்கிருஷ்ண வாசகசாலையை ஆதரிக்கவும், இவ்வாசகசாலை மேன்மேலும் விருத்தியடையவும் எல்லாம் வல்ல இறைவனை மனோவாக்குக் காயங்களினால் வழிபடுகின்றேன். சுபம்.

தி. திருப்புளிசாமி ஐயர்,

காரியதரிசி

"கலைமகள் கழகம்" புதுவை.

7-வது அத்தியாயம்.
3-வது வயது.
(தொடர்ச்சி.)
ஜீவகாருண்யம்.

பரோபகாரம் தன்னைப்போன்ற மானுடர்மீதுள்ள அன்பையும், ஜீவகாருண்யம் விலங்கு பறவை முதலிய சிற்றுயிர்மாட்டுள்ள கிருபையையும் குறிக்கும்.

சன்மார்க்கப் பயிற்சிக்கும் அந்தக்கரணத்தைச் சுத்தப்படுத்தி ஒருவனை நன்னெறியிற் செலுத்துதற்கும் பரோபகாரத்தைப்போலவே ஜீவகாருண்யமும் முக்கியமானது. நமது இந்து தேசம் தொன்று தொட்டு ஜீவகாருண்யத்தில் மிகவும் பிரசித்திபெற்றுள்ளது. எவ்வுயிரையும் தன்னுயிர்போலப் பரிந்தோம்பலே சமணமதப் பிரதமகொள்கை. கொல்லா விரதம்பூண்ட சைன முனிவர்கள் மறந்தேனும் தம்மை மீறியேனும் சிற்றுயிரை வதைக்க நேருமென்பதற்கஞ்சி, சதா மயிலிறகு விசிறிகொண்டு தாம் நடப்பதற்கும் படுப்பதற்கும் இருப்பதற்குமுரிய இடங்களினின்று எறும்பு, ஈ முதலிய அற்பப் பிராணிகளை அவைகள் நசியாவண்ணம் அகற்றிவிடுவார்கள். தலைமீது கைகுவித்துக்கொண்டேனும் வெய்யிலிற் செல்வார்களேயன்றி நிழலில் நடவார்கள்.

“சீத நீழற் செலிற்சிற் றுயிர்த்தொகை
போதச் சாம்புமென் றெண்ணிய புந்தியா
ஞாத வந்தவ ழாறு நடந்திடுங்
காத லங்கை விரித்துக் கவித்தரோ.”

கொல்லா விரதமே எல்லாத் தருமத்திலும் தலைமையான சர்மமென்றும் எந்த வுயிரையும் தம் சொந்த வுயிராக எண்ணவேண்டுமென்றும் நமது ஆரிய மதமும் போதிக்கின்றது.

இத்தகைய போதனைகளினால் நமது இந்துக்களின் இதயத்தில் சாந்தம், தயை, இரக்கமாகிய சற்குணங்கள் பலமாக வேரூன்றி இருந்ததினாலேயே நமது தேசம் ஆப்கானியர், மங்கோலியர் முதலிய குரூர ஜனங்கள் கைவசப்பட்டிருந்தபோதும் ஆரிய நாகரிகம் அழியாமல் நிலை நின்றது.

மேற்கூறியவாற்றால் ஜீவகாருண்யம் சன்மார்க்கபோதனைக்கு எத்துணை முக்கியமானதென்பது நன்கு விளங்கும்.

ஜீவப்பிராணிகளைக் குரூரமாய் இமிசிப்பது குழந்தைகளின் வழக்கம். தும்பி, பட்டான் முதலிய அற்ப ஜந்துக்களின் சிறகைத் துணித்தலும் வாலைக் கிள்ளுதலும் சிறிய பறவைகளின் கூட்டைச் சிதைப்பதும் இறகைப் பறித்து வாதைப்படுத்துவதும் குழந்தைகளுக்கு விளையாட்டாக இருக்கின்றது. இயற்கையாகக் குழந்தைகளிடத்து இரக்கமென்னுங் குணம் இல்லாமற்போகவில்லை. விளையாட்டில் பொம்மை முதலியவைகளிடத்து அவைகள் காட்டும் அநுதாபக் குறிப்புகளே அதற்குச் சான்றாகும். தும்பி முதலியவற்றின் இம்சையைத் தெரிந்துகொள்ளாமையே அவைகளிடத்துச் செய்யும் கொடுஞ் செயலுக்குக் காரணமாகிறது. சகல ஜீவப்பிராணிகளும் நம்மைப்போலவே சுகதுக்க வுணர்ச்சியுள்ளவைகளென்பதைச் சிசுப் பிராயத்தினின்றே குழந்தைகள் கண்கூடாகக் காணும்படி செய்து அவைகட்குச் சிற்றுயிர்கள்மீது தயையும் இரக்கமும் ஏற்பட்டு வளரும்படி முயலவேண்டும்.

(இன்னும் வரும்.)

த. பு. அம்மணியம்மாள்.

ரமணி.

ஓர் காதற் கதை.

(தொடர்ச்சி.)

“ சுவாமி! சுவாமி! சுவாமி! ” என அழைத்தவாறே ஆத்திரத்தோடு எழுந்து விரைந்து சென்று சுவாமியின் வலக்கரத்தைப் பற்றினன் ஜனார்த்தனன். சன்யாசி தன் முகத்தை நிமிர்த்தி அவனைக் கம்பீரமாய் உற்று நோக்கினார்.

“ எளியேனை க்ஷமிக்கவேண்டும். இந்த நீலியின் முன்பு என் ரகஸ்யங்களை எப்படிச் சொல்வது என்றெண்ணித்தான் கொஞ்சம் லஜ்ஜையுற்றேன். என் சங்கடகாலத்தில் எனக்குப் போராதரவாக என் ஸரஸ்வதி தாயே உங்களை என்னிடம் அனுப்பினளென்று நம்பியிருக்க, நான் ஏன் என் ரகஸ்யங்களை உங்களுக்கு ஒளிக்கவேண்டும். நீங்கள் உத்தரவளித்தால் இப்பொழுதே இந்த நீலியின் முன்பாகக்கூட என் ரகஸ்யங்களெல்லாவற்றையும் சொல்லிவிடுகிறேன்” என்றான் ஜனார்த்தனன். இவ்வார்த்

427

தைகளை அகபூர்வமாகவே சொன்னானா, அல்லது உபசாரமாக உரைத்தானா என்று சுவாமி சிறிது சந்தேகித்தார். அச்சந்தேகம் தீரும் வண்ணம் உடனே, "உன் ரகஸ்யங்களை எனக்குத் தெரிவிக்க உனக்கு இஷ்டமிருப்பது உண்மையானால் நான் உன் வீட்டில் உன்னிடம் கொடுத்த ரமணியின் கடிதத்தை இந்த க்ஷணமே என்னிடம் கொடு" என்றார். அவர் கூறி முடிப்பதற்குள் ஜனார்த்தனன் ரமணி குருவியின் காலில் கட்டித் தனக்கனுப்பிய கடிதத்தைத் தன் சட்டைப்பையிலிருந் தெடுத்துக்கொடுத்துவிட்டான். சந்யாசி மீண்டும் கட்டிலருகே சென்று அதன்மீ தமர்ந்து அக்கடிதத்தைத் தமக்குள் இருமுறை வாசித்துவிட்டு, "இந்த விஷய சம்பந்தமாக வேறென்னவேனும் கடிதம் உன்னிட மிருக்கிறதோ?" என்றார். சிறிதும் ஆலோசியாமல் ஜனார்த்தனன் தனக்குச் சாவித்திரி எழுதிய கடிதத்தையும் தன் சட்டைப்பையிலிருந்து எடுத்துச் சந்யாசியினிடம் கொடுத்தான். அக்கடிதத்தையும் மௌனமாக மும்முறை வாசித்தனர் சுவாமி. பின்பு அவ்விரு கடிதங்களையும் மடித்துத் தன் அங்கியிலுள்ள பையிலிட்டு எழுந்து நின்று, "விளக்கை யெடுத்துக்கொண்டுவா ஜனார்த்தனா!" என்று அறைக்கு வெளியே சென்றார். ஜனார்த்தனனும் அருகேயிருந்த சிம்னி விளக்கை எடுத்துக்கொண்டு அறையைவிட்டகன்றான். முத்தம்மாளும் இருவரையும் தொடர்ந்து வந்தாள்.

"சீ! பிசாசே! நீ ஏன் வருகிறாய்! இந்த இருட்டறையில் இன்றிரவெல்லாம் நீ சிறைப்பட்டிருக்கவேண்டும் என்று நான் சபிக்கின்றேன், போ உள்ளே" என்று முழங்கி யானை முகப்பிடித் தடியை ஓங்கினார் சுவாமி.

"சாமி! நான் ஏழைப்பெண் சாமி. மன்னிக்கவேண்டும். உங்கள் காலைப் பிடித்துக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்" எனப் பிதற்றி ஸர்வாங்கமும் தரையிற் பொருந்தச் சுவாமியை நமஸ்கரித்தாள் ஸ்திரீ.

"என் சொற்படி நடந்தால்தான் நீ பிழைத்தாய்" எனக் கர்ஜித்தவாறே தம் மந்திரத் தடியால் முத்தம்மாள் தலைமீது மெல்ல ஒரு அடி அடித்தார் சுவாமி. அந்த அடியையே தாளாது ஆ என்ற பரிதாபகரக் குரலுடன் தன் தலைமீது கைவைத்துக்கொண்டு எழுந்து உடனே அறைக்குள் ஓடினாள் முத்தம்மாள். சந்யாசி கதவை இழுத்துச் சார்த்திப் பூட்டுவாயிலிருந்த சாவியால் தாளிட்டுவிட்டு ஜனார்த்தனனோடு மாடியிலிருந்து கீழே இழிந்து ஒரு விசால அறைக்குட் சென்று ஆங்குள்ள ஒரு சோபாவின்மீ துட்கார்ந்து கூறலாயினர்.

"ஜனார்த்தனா! நீ கொடுத்த இரண்டு கடிதங்களிலிருந்து நான் என்ன தெரிந்துகொண்டேனென்றால், உண்மையில் நீ சாவித்திரி என்ற

பெண்ணைத்தான் காதலிக்கிறாய். ஆனால் உன் அத்தை உன்னை வளர்த்த தோஷத்திற்காக ரமணியை விவாகஞ் செய்துகொள்ளத் தீர்மானித்திருக்கிறாய். உண்மையில் ரமணியிடத்தில் உனக்குக் காதலில்லை. ரமணிக்கும் உன்னிடத்தில் காதல் இல்லை. சாவித்திரிக்கோ உன்னைத் தவிர வேறு ஒரு புருஷனையும் மணந்துகொள்ள இஷ்டமில்லைபோல் தோற்றுகிறது. இந்தக் காரணங்களினால்தான், உன் காதற்குரிய சாவித்திரியை எவ்வாறேனும் உனக்கு விவாகஞ் செய்விக்கவேண்டுமென்ற கருத்துடன். அர்த்தராத்திரியில் சாவித்திரியை உன்முன்பு கொணர்ந்து நீ மறக்க முயலும் உன் காதலை உன்னால் ஒருகாலும் மறக்கக்கூடாமற் செய்ய ரமணி யத்தனித்தாள். அவள் அவ்வாறு யத்தனித்தது நியாயமென்றே எனக்குத் தோன்றுகிறது. உனக்கு எப்படித் தோன்றுகிறது?"

"காதலைப்பற்றியும் கலியாணத்தைப்பற்றியும் பேசுவதற்கு இது தானா சுவாமி சமயம்? என் ரமணியைக் காண்பதற்கு ஆலோசனை சொல்லுங்கள். எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை" என்றான் ஜனார்த்தனன்.

"உன் ரகஸ்யங்களையும் உன் மனத்தையும் நன்றாய் அறிந்து கொண்ட பிறகுதான் நான் ரமணியைத் தேடும் விஷயத்தைக் கவனிப்பேன். நான் கேட்கும் விஷயங்களுக்கு நீ சரியாய்ப் பதில் சொல்லாவிட்டால் இந்த மந்திரத்தடி முத்தம்மாள் மண்டையை முத்தமிட்டது போல் உன் மண்டையையும் அதிக ஆவேசத்தோடு முத்தமிடும்" எனப் புன்னகையுடன் சற்று உரக்கக் கூறினர் சுவாமி.

"சரி என்னவேண்டுமானாலும் கேளுங்கள் சொல்லுகிறேன்" என்றனன் ஜனார்த்தனன்.

"நான் சொன்ன விஷயங்களெல்லாம் உண்மைதானே? வஜ்ஜையில்லாமல் ஒப்புக்கொள்."

"ரமணிக்கு என்னிடம் காதலில்லை என்றது பிழை. அவள் என்னைத் தன் உயிராகக் கருதியிருக்கிறாள். எனக்கு அவளிடம் அன்பில்லை என்றதும் பிழை. அன்பில்லாமலா நான் மாடியில் கட்டிலில் மூர்ச்சித்து வீழ்ந்தேன்?"

"ரமணியினிடத்தில் உனக்கு அன்பில்லை என்பது பிழைதான். ஆனால் நான் அப்படிச் சொல்லவில்லை. உனக்கு ரமணியிடத்தில் காதலில்லை என்றுதான் சொன்னேன். அப்படிச் சொன்னது பிழையல்லவே?"

"அன்பென்றாலென்ன! காதல் என்றால் என்ன! இரண்டு வார்த்தைகளையும் ஒரே அர்த்தத்தில்தான் நான் உபயோகித்தேன்,"

"காதல் என்ற மொழிக்கு அர்த்தமாக அற்புத அன்பு என்ற மொழிகளை ரமணி உனக்கெழுதிய கடிதத்தில் உபயோகித்திருக்கிறாள். அவள் எழுதிய பிரகாரம் உன் மனம் சாவித்திரியின் மனத்தோடு அற்புத அன்பினால் பந்தப்பட்டிருப்பது உண்மைதானே? என்னிடம், உன் மனத்திற்கு அமைதியை அளிக்கும் சக்தியுடைய சுவாமியிடம், உன் இஷ்ட தேவதை உன் சங்கடகாலத்தில் உனக்குப் பேராதரவாக அனுப்பிய சுவாமியிடம், ஜனார்த்தனா! உண்மையை ஒப்புக்கொள். நான் உனக்குத் தகுந்த மதிகொடுப்பேன்."

"மெய்தான், ஆனால் அந்த அன்பினால் என் மனம் ரமணியின் மனத்தோடும் பந்தப்பட்டுத்தானிருக்கிறது."

"ஆனால் எந்தப் பாசம் அதிக உருக்கமானது? சாவித்திரியிடமுள்ள பாசந்தானே? ஜனார்த்தனா! எனக்குச் சாமுத்திரிகா லக்ஷணம் தெரியும். அன்றியும் எந்தச் சமயத்திலும் ஒருவர் மனத்திலிருப்பவைகளை அறியும் ஒரு அற்புத சக்தியை என் குருநாதன் எனக்கு அளித்திருக்கிறார். ஆகையால் உன் மனத்திலிருப்பவைகள் எனக்குத் தெரியும். அவைகளை நீ வாயினாற் சொல்லிவிடு. மயங்காதே" என அன்பாய் அறைந்து ஜனார்த்தனன் முகத்தையே உற்று நோக்கினார் சந்யாசி.

(தொடரும்.)

சு. அ. சுப்பராயப்பிள்ளை.

மாம்ஸ பக்ஷண நிராகரணம்.

(முற்றொடர்ச்சி.)

உலக சிருட்டிக்கண், தொன்மைதொட்டே மக்கள் மாட்டுப் பாவமும் வந்து சாருமியல்பிற்று. அப்பாவமே மாந்தரது மதிவலியைச் சில முறுத்தித் தீநெறிக்கண் தானே கொண்டு செலுத்தாநிற்கும். இஃது இன்றுகாறுஞ் சர்வ சாத்திர சம்மதத்தின் றுணிபாய்நின்றதென்க. ஆகவே, மண்ணோர் தமக்கு மது மாம்ஸ போசனத்தின் இச்சையும், இதன் சார்பானே உண்டாயிருத்தல் வேண்டுமெனல் தானே போதரும். அவ்வவாவினைத் தவாது பெரும்பாலு மேற்கொள்ளுங் கொள்கையானது, தம்மை நாணாளுந் திரும்பிவந்தடையாது சிறிதளவிற் றேய்ந்தகன்று நன்மை பயத்தற் பொருட்டே, அஜமேத முதலிய யாகங்களில் அவிசொரியும் போழ்தினில், தமது விருப்ப நிறைதரச் சுருதிகள் பகர்ந்தனபோலும்.

இவ்வாறு செப்பிவரும் வேள்விகளைச் செய்யாது சும்மாவிருக்குங் காலத்தும் தினவிருத்தி மாம்ஸவுண்டியிற் கையாடாது தடைபுரிந்தகற்று தற்குப் போதிய தந்திர யுக்தியேயன்றி வேறன்று. திருட்டாந்தமாக, இது தாற்பரிய வடைவுகொள்ளும் வேதப் பிரமாணங்கள் பலவென் றுணர்க. அவற்றில் நந்தமிழ் வேதத்தில்,

"அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று"

எனத் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்தருளினர். இதன் பொழிப்புரை யாங்ஙனமெனில், ஒருவன் அவிபொழிந்து பல வாயிர மகங்களை முடித்தலினும், எச்சிறு பிராணியெனினுங் கொன் றருந்தாதிருப்பனேல், அத்தருமமே அன்னோற்குச் சீரிய நன்மைப் பய னாம். இனிக் கருத்துரை: மாம்ஸ புக்தத்திற் றினமுஞ் செல்லாமல், வேள்வி யொன்றினிற் செல்லும் மன நலச் சீர்ப்பாட்டினும், அன்னோன் அவ்வுணவை முற்றுந் துறந்துளன் எனுந் தன்மையே அவனது நன் மைப் பேறுங் குணக்குன்றில் ஏற்றிவைக்குஞ் சுடரென்க. அதுவன்றி, ஓமம் ஓம்புஞ் சமயத்தினில் ஊனுணவு செய்தலினும், அதனை ஆக்கிரா ணித்தலே மிகப் புண்ணியமாம். இவ்வேதக் கூற்றினை அனுசரித்துத் தெளிவுகொண்டனர் பலவான்றோர்.

இதற்கோருபாயங் கூறுதும்: சுபாவ குணத்திற் கசப்பாயிருக்கும் இலுப்பைப் பிண்ணாக்கு, உப்பு முதலிய பொருட்கள், சர்ப்பவிடந் தீண் டிடும் ஒருவற்கு இன்சுவையாகக் கொண்டிடும் விருப்பினில் அக்கைப்புப் பதார்த்தங்களை விரும்பி வேண்டின், அன்னோற்குச் சிகிச்சை செய்து வரும் ஆயுர்வேத பண்டிதர் கைப்புப் பொருட்களை உட்கொள்ளுதற்கு ஒருகால வரையறை யுரைத்துத் தடைபடச் செய்வது, அவனுடைய சுயேச்சையை மறுப்பதற்கன்றி வேறெதற்கு? தவிர, யாகஞ்செய்யும் அக்காலத்து இறைச்சி புசித்தல் தகும் என நியமித்த மறைப்பொருளின் நுண்கருத்தும், மானுடர் தமதாசை வழியில் எக்காலமும் அத்தீயுணவிற் பிரவேசியாதபடி மறுக்கவந்த நெறியென்ப. இது நிற்க,

சில பக்ஷாந்தர வாதிகள் கடுவாய், சிங்கம், புலி, நாய், நரி முதலிய மாம்ஸ பக்ஷண மிருகங்கட்குரிய இரைப்பைகளும், மனிதரது ஜீரண சக்திப் பைகளும் ஒன்றுமெனவே, ஊனுணவு தகனத்திற்கு மிகப் பொ ருத்தமுடன் கடவுள் அமைத்து வகுத்தனர் எனக் கூறுவர். அங்ஙன மேல் புலி, கடுவாய், சிங்கம் ஆகிய இவ்விலங்கினம் ஊனையன்றி வேறு சாகமூலாதிப் புசிப்புகளை உட்கொள்ளா. மானவர் பல மூலாதி வருக்கங்

களை அருந்தி நெடுநாள் சுகவாழ்வு பெற்றிருப்பரன்றோ? அன்றியும், இத்துட்ட ஜந்துக்கட்குச் சிறிதும் ஆயுதத் துணையின்றியே, மனிதரைக் கொன்று புசிக்கும் வன்மையை நினைக்குமிடத்துத் தெய்வ சித்தவமைப்புக்கணுள்ள மானுடர், அக்கொடிய விலங்குக் கூட்டங்களின் முன்னர்த் தாமாகவே வந்து அவைகட் கிரையாமெனத் தமது சரீரத்தை அளிக்கும் பான்மையுடையோராவர்.

ஆதலால், அவ்வனுமானம் அனுட்டானத்திற்கு முற்றும் யோக்கியமுடைத்தாமோ? இஃதன்றிச் சில தீபாந்தரங்களில் வசிக்கும் மாந்தர் தமக்கு இறைச்சி யுணவுகளையன்றி வேறு யாதொரு பக்ஷண யோக்கியமான பதார்த்தங்கள் கிடைக்காது புசிக்கின்றனர். அதுபற்றி, பரமபதி மனுஷ வினத்தவர்க்கு ஊனையே ஆகாரத்தின் பொருட்டுச் சிருட்டி செய்துவைத்தார் என நினைந்து அதனை அனுட்டிப்போமெனில், அச்செயற்கு இறைச்சி ஆகாரமின்றி வேறொன்றினாலும் ஜீவனோபாயத்தை நிருவகிக்கும் இயல்பற்ற துட்ட மிருகங்கட்குச் சரியாமேயன்றி மற்றையோர் வினாவிற்கு இடமு முண்டுகொல்? திவ்விய ரசமேவு பற்பல மூலாதிகளைத் திருப்தியுடன் பட்சித்துவாராநின்ற சரீரத்தை இரட்சிப்பில் வைத்துயிர்கொண்டு வாழும் நாகரிக புமான்கட்கு எட்டுணையும் இணை செப்புதற்கரிதே.

மேற்சொல்லிவரும் விலங்கினங்கட்கு வமைபெறும் மனிதர்களைப் பிற்சேர்ந்தொழுகுதல் சற்புருடருக்கு ஆவசிகமேயோ! இதுவன்றிப் பால் நெய் இவற்றிடத்தும், பருப்பு, கடலை, உழுந்து முதலிய தானியங்களினும், உருளைக்கிழங்கு முதற் பல மூல பதார்த்தங்களினும், இறைச்சியின் ரசானுகுணங்கள் விரவியுள்ளனவென்றதனை அனுபவித் துண்மை எனக் கண்டோர், முற்கூறிப் போந்தவற்றால், தானியாதிகளை நாம் புசிக்கலாமெனில், ஊனையும் என் அருந்துதல் தகாதென் றுரைப்போர்பால், அவ்வாசங்கைக் கீண்டஃது அநுசிதமெனினும், அவைகளில் ஜீவஹிம்ஸை இன்றென்றே தேற்றெனச் செப்புவாம்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் திருவாய்மலர்ந்தருளிய பகவத்கீதை 16-வது அத்தியாயத்தில் அநேக நற்குணத் தொகுப்பினுள் அஹிம்சை அதாவது ஆன்மகோடிகட்குத் துன்பஞ் செய்யாமை எனுஞ் சிறந்த குணமும் தெய்வம் அடையத்தகுந்த பதவியாமெனச் செப்பியுளது. "அஹிம்ஸா பரமோ தர்ம:" எனும் வேத மகாவாக்கியார்த்தம், எஞ்ஞான்றும் நமது ஞாபக சூத்திரமாமெனக் கொள்ளற்பாலது.

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள். (திருவள்ளுவர்.)

உலகுடன் விளங்கவரு சீர்த்திநிலை கொள்ளி
னிலையில்கதி நான்கினிடை நின்றுதடு மாறு
மலகிறுய ரஞ்சினுயி ரஞ்சவரும் வஞ்சக்
கொலையொழிமி னென்றுநனி கூறின ரறிந்தோர்.

(வளையாபதி.)

சடக்கடத் துக்கிரை தேடிப் பலவுயிர் தன்னைக்கொன்று
விடக்கடித் துக்கொண் டிறுமாந் திருந்து மிகமெலிந்து
படக்கடித் தின்றுழல் வார்கடம் மைக்கரம் பற்றிநமை
னிடக்கடிக் கும்பொழு தேதுசெய் வார்கச்சி யேகம்பனே.

(பட்டினத்தடிகள்.)

கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
வெல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே.

(தாயுமானவர்.)

இவைபோன்ற சாத்திர நியாய அளவைகள் அளவற்ற தன்மையில் இருக்கின்றன. அவை விரிக்கில் பெருகும்.

இனி வேறு சிலர், அணுரூபமான அளவற்ற கிருமிகளால் நிறைந்துள்ள பல மூலாதிகளும், தண்ணீரும், ஜல ரூபமான இளநீர் பழ ரஸம் இன்னோரன்ன பல பலாதி சுவையும், பானீயமும் பருகற் பாலனவோ வெனப் பேசில், இது விஷயத்தில் என் சிறுமதிக்கெட்டிய வண்ணம் தெய்வ வுண்மையை அனுமானித்தறிதல் வேண்டும்.

கடவுள், மானிடர் கூட்டங்களில்வாழையடி வாழையாகச் சிருட்டி பண்ணிவந்த முறையே பட்சி மிருகாதிகளையும், அவ்விதமே பாரம்பரிய ஜன்னிய நீதியில் உண்டுபண்ணி வைத்தனர் எனப் பல அனுமானங்கள் உள்ளன. அவை யாங்ஙனமெனில், மேற்கூறியவற்றால் விருட்சாதிகளைப் பாரம்பரிய ஜன்னிய யோக்கிய அபிவிருத்திக்குக் காரணமாக, பஞ்சேந்திரிய வுணர்ச்சியில், பரிசவுணர்வு ஒன்றினைப் பெற்றுள்ள ஓரறிவுயிரெனப் பெரியோர் கூறுவர். அஃது அனுபவமேயாம். அவ்விருக்ஷாதிகட்குக் கமனோபாயமான சக்தி அதாவது நடப்பதற்கியன்ற சுவாச நிசுவாசங்களைக் கொடுக்காமல், தெய்வம் படைத்துள்ள தகுதியை நினைக்குமிடத்து, தோன்று மித்தருவாதிகளில் பெருகிவரும் பல பிரயோஜனத்தை, நடந்து திரியுஞ் சகல பிராணிகளும் ஏராளமாய்க் கிரகித்துக்கொள்ளு மேதுபற்றியே அமைத்துளாரென்றே அனுமானப்படற் பாலது.

433

அன்றியும், ஊற்று நீரைப் பன்முறையும் முகந்துகொள்ளாதிருக்குங் கேணியில், எவ்வாறு அந்நீர் வற்றி வறுமையுறுமோ, அவ்வாறே தருவாதிகளிடத்து மிகுங் கிளைகளிற் செறிந்தோங்கி வளருந் தழைகளை அரக்கியும், காய்களை உதிர்க்கவேண்டுங் காலத்ததனை உதிர்த்தும், பலக்கிராகியங்கள் கொள்ளும் போழ்து கொள்ளுதலும் வேண்டும். அப்படிச் செய்யாதுவிடின் அத்தருக்கள் அருகிக் கரிதல் சாலவுமடைகின்றன. இவைகளை அவ்வக்காலத்துச் செவ்வியின் முறையே இயற்றிவரின், அத்தாவரங்கள் வளர்ந்தோங்கிப் பல வளமைகளை வழங்கிவருந் தன்மையைக் கருதும்போழ்து இத்தருவாதி பலங்களைக் கடவுள் மண்ணோர் உதவிக்கெனவே நிருமாணஞ் செய்துவைத்தனர் என ஐயப்பாடின்றிச் செப்புதல் தகும்.

மிக வெளிமையோடு வாழும் ஆடு மாடுகளின் பல்லுறுப்புகளில் ஒன்றினைத் தறித்துவிடின், அவைகள் அடையும் அவதிப்பாடுபோன்று தாவரங்களின் கொம்புகளை முறித்த போழ்தினில் உயிர்போகாது கொடிவழியாகவும் கிளைகள் நெறியாகவும் உயிர்த்து வளர்ந்தோங்குகின்றன. இவ்வுண்மை கண்கூடென் றுணர்ந்தறிக. ஆகவே, அசர வத்துக்களைச் சர வத்துக்களின் ஆகாரத்தின் பொருட்டே இக்காசினிக்கண் ஏககாயகன் அற்றை ஞான்றே அளவற்ற படைப்பினில் நம்மனோர்க் கிரங்கிக் கடாக்ஷித்து வைத்தனர் என யாவரு மறிவர். தருவாதி பல மூலாதி யுணவுப்பொருட்க ளில்லாவிடின் எவ்விதப் பிராணிகளும் உயிர் வாழமாட்டாவென்பது திண்ணம். இவ்விளக்கப் பாகுபாட்டினில் மண்ணுள்ளோர் சாக பக்ஷணிகளாய்ப் பரமபதியின் போருட் படைப்பினுள், சுக ஜீவ வாழ்வெனும் பெரும் பேறடைந்து வாழ்ந்துய்ந்து வருவதுவே மானவ வுத்தம தருமம் என்பது எம தபிப்பிராயம்.

ஜீவப்பிராணிகளைக் கோறல்புரியும் அத்தருணத்து, அவைகள் பதைபதைப்புடன் ஒலித்தலறு மிரக்கப் பெற்றியைக் கருதுமளவில், அறிவுடைய நம்மனோர்க்குச் சரீர நடுக்கமுறுவதை இன்றும் நாம் காண்கின்றோம். ஆகவே ஜீவகாருண்யத் தருமமின்றிக் கொலைசெய்து தன்னூன் பெருக்கற்கு மாம்ஸ வுண்டிகொள்வது எவ்வாற்றானும் பொருந்தாது. நீதியின் பாற்பட்டொழுகும் நடுவு நிலைமைப் பொறுப்புமன்று. ஆதலால்,

செந்தமிழ்ச் செல்வர்காள்! இத்தன்மையனவாய அன்பற்ற தீச்செயற்கண் ணாட்டமுற்றோர் கொடும் பாதகத் தேட்டமன்றோ பெற்றோராவர்? மனிதர் அடையத்தகும் கல்வி, கேள்வி, ஆராய்ச்சி, ஒழுக்கம் என்பன, இத்தகைய ஜீவகாருணியத் தன்மை அடைதலேயாம். அது

434

பற்றி நாமனைவரும், இத்தீநெறிக்கண் புகாது, சன்மார்க்கப் பரிபாலனப் பகுதிக்கண் அளாவிய அன்பு முதலிய நற்குணங்கள் அமைந்த பெருமைக் குணங்களை அடைதற்பொருட்டு, எல்லாம் வல்ல முழு முதற் கடவுளின் திருவருட் பெருக்கை மனம் மெய் மொழிகளால் வழிபடுவோமாக.

வித்வான், ஜி சுவாமிநாதன் ஆசாரி,

கோட்டாறு.

இலக்கியப் பகுதி.

சீவகசிந்தாமணி.

(க. நாமகளிலம்பகம்.)

இப் பாதகண்டத்தில்,

1. நற்ற வஞ்செய் வார்க்கிடந் தவஞ்செய் வார்க்கு மஃதிடம்
நற்பொ ருள்செய் வார்க்கிடம் பொருள்செய் வார்க்கு மஃதிடம்
வெற்ற வின்பம் விழைவிப்பான் விண்ணு வந்து வீழ்ந்தென
மற்றை நாடு வட்டமாக வைகு மற்ற நாடரோ.

என்று பெரியோர் விதந்துகூறும் இசையாற் றிசைபோய ஏமாங்கத நாட்டில் ஒப்புயர்வற்ற இராசமாபுரத்தில் குருகுலத்திற் றோன்றிய சச்சந்தனென்னும் வேந்தன் அரசுபுரிந்து வந்தான்.

அவனது மாமனும் விதைய தேசத் தரசனுமாகிய ஸ்ரீதத்தன் மகள் விசயை யென்பாள், திருவிற்கோர் திருவன்னவள்.

சச்சந்தன் அவளை மணந்து அவளது பேரழகி லீடுபட்டுக் கணப் பொழுதும் அவளை விட்டுப் பிரியானாய், தன் அமைச்சர்களுள் ஒருவ

---

1. அவ்வேமாங்கதமென்னும் நாடு, வெற்றியையுடைய தனதின் பத்தை உலகை விரும்பப்பண்ணுதற்கு விண்மகிழ்ந்து வீழ்ந்ததென்னும் படி, தன்னை யொழிந்த நாடு தனக்கு எல்லையாக வைகும். அது வீடு பெறத் தவஞ்செய்வார்க்கு இடம்; மறுமை கருதி இல்லறம் நடத்துவார்க்கும் இடம்; அது நற்பொருளைப் பயக்கும் கல்வியைக் கற்பார்க்கு இடம்; நிலையாத பொருளைத் தேடுவார்க்கும் இடமென்க.

உம்மை யிரண்டும் – இழிவு சிறப்பு. வெற்றம் வெற்றி.

435

ஞகிய கட்டியங்காரனை யழைத்து, "அமைச்ச! யான் விசயையை விட்டுப் பிரிதலாற்றேன்; நீ இவ்வையத்தைக் காத்துவருக" எனலும், கட்டியங்காரன் தான் கருதியிருந்ததனை அரசனே தானே கூறக்கேட்டு உள்ளே மகிழ்ச்சிகொண்டு, "ஞாலங் காத்தல் எனக்கு, யானையின் பிடரி விட்ட தவிசை நாயின்மேலிட்ட தொக்கும்" என்று மறுத்துப் பின்னர் அரசன் வேண்டுகோட் கிணங்கினவன்போல் நடித்து உலகத்தைக் காத்தல்செய்யலானன்.

இது கேட்ட நிமித்திகன் என்னும் அமைச்சன் அரசனை யணுகி, "வேந்தே! உனது அரசியலை ஒருவன்மேல் வைப்பின், நிலமும் திருவும் நின்னை நீங்கும், இதனை நீயே யோர்தி" என்று நீதியாற் கூறினன்.

"எனக்கு உயிர்போன்றவன் என்னை யொழியப் பிறரையில்லாதவன் போர்பல வென்றவன் கட்டியங்காரன்; அவனுக்கு யான் செய்வன செய்தேன் அவன்றான் எனக்குச் செய்வன செய்க; நீ சிறிதும் பொருமை கூறவேண்டா; நீயும் நின்னிலையிலே வாழ்வாயாக; இனி இக்கூற்றினைத் தவிர்க" என்று அரசன் கூற,

2. பெரும்பெயர்ப் பிரம னென்னும் பீடினுற் பெரிய நீரா
னரும்பிய முலையி னளுக் கணிமுக நான்கு தோன்ற
விரும்பியாங் கவளை யெய்தான் விண்ணக மிழந்த தன்றித்
திருந்தினுற் கின்று காறுஞ் சிறுசொல்லாய் நின்ற தன்றே.

3. காமமே கன்றி நின்ற கழுதைகண் டருளி னலே
வாமனர் சென்றுகூடி வருந்தினீ ரென்று வையத்

2. பிரமனென்னும் தவத்தாற் பெரிய நீரான் திலோத்தமை பொருட்டு நான்கு முகந் தோன்றும்படி விரும்பி அவ்விடத்து அவளைப் பெருனய் விண்ணக மிழந்ததேயன்றி அவனுக்கு இன்றளவும் புறஞ்சொல்லாய் நின்றதல்லவோ என்றுனெனக.

முறை செய்யாமையிற் றன்னிலை யிழந்தான்.

3. வேந்தே! நாம் இக்காமத்தைத் தெரியின், காமமே யடிபட்டு நின்ற ஆண் கழுதையைக் கண்டு அருளாலே புத்தனர் பெண் கழுதையாய்ச் சென்று கூடி இக்காமத்தாலே வருந்தினீரே யென்ன, அது வையத்திலே ஈமத்து மாலைபோல இழித்திடப்பட்ட தல்லவோ வென்றுனெனக.

காமமே – தேற்றம். வாமனர் – புத்தன். என்று – என்ன. ஈமம் – சுடுகாடு.

தீமஞ்சேர் மாலை போல விழித்திடப் பட்ட தன்றே
காமவேற் றடக்கை வேந்தே நாமிது தெரியி னென்றான்.

இங்ஙனம் காமத்தால் விளையும் பழி பாவங்களைப் பல நியாய வாயி லாக எடுத்துக் கூறினன் பின்னரும் நிமித்திகன்.

4. அளந்துதாங் கொண்டு காத்த வருந்தவ முடைய நீரார்க்
களந்தன போக மெல்லா மவரவர்க் கற்றை நாளே
யளந்தன வாழு நாளு மதுவெனக் கறைய லென்றான்
விளங்கொளி மணிகள் வேய்ந்து விடுசுட ரிமைக்கும் பூணான்.

இங்ஙனம் அரசன் கூறவே, நிமித்திகன் "அரசே! நூல் வழக்கு இடித்துக்கூறல் அமைச்சர்க்கு இயல்பென்றமை கண்டு உறுதி நோக்கி இத்துணையும் இயல்பாகக் கூறினேன்; இனி மாதர் கொங்கையை நினக்கு எப்பொழுதும் விருந்தாகக்கொண்டு புணர்க; நீ என்னை முனியினும் நின்தவறு காணாமல் துறவிடத்தே செல்வேனெனப் போயினன்.

பின்னர்ச் சச்சந்தன் விசயையினது அல்குலாகிய இன்பக் கடலினும் முலைத்தடத்தினும் வெறாதே படிந்து உண்டு வேறு மனக்கவற்சியின்றி மகிழ்ந்திருக்கு நாளில், விசயை கருப்பமுற்று ஒருநாளிரவில் மூன்று கனாக் கண்டு அஞ்சி நடுங்கிப் பொழுது புலர்ந்ததும் கடவுளைத் துதித்துக் கணவனை வணங்கி,

5. தானமர் காதலி தன்னொடு மாவலி
வானவர் போன்மகிழ் வுற்றபின் வார்நறுங்

---

4. அரசன், வரைந்துகாத்த தவமுடையார்க்குக் கருவாய்ப் பதிகின்றபொழுதே போகமெல்லாம் அளந்தன; அவரவர்க்கு அப்பொழுதே வாழுநாளு மளந்தன; அது எனக்கு உரையலென்றானென்க.

5. அரசன் தான் மேவின காதலி தன்னோடே மகிழ்வுற்ற பின்பு அவள் தேன் முதலியன வென்னும்படி கனா மொழியாநின்றாளென்க.

மாவலி – அரசன். வானவர்போன் மகிழ்வுற்றபின் – தேவர் நோக்கததால் நுகர்ந்தாற்போல இவனும் நோக்கத்தால் மகிழ்ச்சியுற்ற பின். கனவு மூன்றிற்கும் தேன் முதலிய மூன்றும் உவமம். பிண்டி (அசோகு) வீழ்ந்ததென்னு மொழி இவள் கூறுதலின் இனிதாய்ப் பின் தீங்கு விளைத்தலிற் றேனுவமம்; "ஆர்ந்தோர் வாயிற் றேனும் புளிக்கும்" என்றார் பிறரும். "எண் – முத்தணிமாலை" என்ற சொல் குலந்தூய்மை கூறுதலிற் பாலுவமம். இவனாக்கத்திற்கு ஊறு மமிர்து உவமம்; இவனாக்கம் அமுதுபோல் உயிர்களைக் காத்தலின்.

437

தேனெனப் பாலெனச் சில்லமிர் தூற்றெனக்
கானமர் கோதை கனமொழி கின்றாள்.

ஒரு அசோகமரம் தானணிந்த பூங்கொத்துக ளொழுகக் கெட்டுப் பின்பு தானும் நேராக வீழ்ந்தது; அதன் வழியிலே ஒருமுளை அதனை யொத்து எட்டு மாலையை யுடையதொரு முடிக் கிருப்பிடனுக நட்டு வைத்தாற்போலே ஓங்காநின்று வளர்ந்தது என மொழிந்தனள். மொழிதலும் அரசன் கனவின் இயல்பைக் கனு நூலின் விதியாலே பயனைத் தெரிந்து முடி துளக்கி அவற்றில் நல்லவற்றை (மாலையையும் முடியையும்) எடுத்து இவளழகு கெடாமற் கூறுகின்றான்.

"நீ கனவிற் கண்ட முடி நின்மகனும்; பூமாலைகள் அவனால் விரும்பப்படும் தேவிமார்; முளை நின்மகனுக்கம்" என மூன்றாக்கிக் கூறிப் பின்பு முறிந்ததனுலுள்ள பயனைச் சொல்லாது விட்டான். பின்னர் அசோகு முறிந்ததனுற் பயன் என்னென்று விசயை கேட்ப, "எந்திழாய்! எனக்கு இங்ஙனே ஓரிடையூறு வந்ததுகாண்" என்றவளவிலே, பேச்சற்றவளாய் நிலத்தில் வீழ்ந்து மூர்ச்சையுற்றனள் விசயை.

அரசன் அவளை வாரியெடுத்துத் தனது குளிர்ந்த அகன்ற மார்பிலே உறத்தழுவி, அவள் விழிக்க, அப்பொழுது "நினக்குக் கனவின் றன்மையை மெய்யெனக் கருதும் பெண்டன்மை பெரிதாயிருந்ததெனக் கூறிப் புனைந்துரையாற் பரவித் துயர் தீர்த்தான்.

(வரும்.)

பத்திராதிபர்.

சாத்திரப் பகுதி.

நியாயமாலா.

(முன் தொடர்ச்சி.)

69. ஜலதர நியாயம்: — ஜலதரம் – மேகம், நியாயம் – திருஷ்டாந்தம். இது பெரியார் கைப்பட்ட பொருள் பாப சம்பந்தம் நீங்கித் தூயவாய்ப் பலன் தரலும், சாஸ்திரார்த்தங்கள் பெரியார் வாயிலாய்க் கிரகிக்கப்படின் அதன் கண்ணுள்ள பூர்வ பக்ஷ வாக்கியார்த்தங்கள் களையப்பட்டுச் சித்தாந்த வாக்கியார்த்த வுணர்வைப் பெற்றுப் பயனுறுதலும் இதுபோலவென்கின்றது. அதாவது: மேகத்தால் கிரகிக்கப்பட்ட சமுத்

திர ஜலமானது உவர்நீங்கி நன்னீராய் அதனால் உலகுக்குப் பயன்படு மாறுபோலவென்கின்றது.

70. வக்ர நாளிகேர நியாயம்: — வக்ரம் – வளைவு, நாளிகேரம் – தென்னை, நியாயம் – திருஷ்டாந்தம். இது தன்னைக் காப்பவர் ஒருவரா யிருக்க அவர்க்குப் பயன்படாமல், பிறர்க்குப் பயன்படுவார் செய்தி இது போலவென்கின்றது. அதாவது: முடத்தெங்கானது (வளைந்த தென்னமரம்.) தன்னைத் தண்ணீர்விட்டு வளர்த்தவரது தோப்பில் தன் பலனை வீழ்த்தாமல் அடுத்த தோப்பில் தன் காயை வீழச்செய்வதுபோல வென்பதாம்.

71. க்ஷார சமுத்திரோதக நியாயம்: — க்ஷாரம் – உவர், சமுத்திரம் – கடல், உதகம் – ஜலம், நியாயம் – திருஷ்டாந்தம். இது உலோபிகளின் செல்வமானது தருமவான்களுடையதேயா யிருத்த லிதுபோல வென்கின்றது. அதாவது: சமுத்திரமானது தன்பாலுள்ள ஜலத்தை ஒருவரிடஞ் சென்று ஈதலுமின்று. ஈயினும் அதன் உவரைக் கண்டு அதனைக் கொள்வாருமின்று. ஆதலின் அக்கடல் நீரானது தன்னை யெடுத்துத் தன்கண்ணுள்ள உவரைப்போக்கி நன்னீராக்கி உலகிற்குச் சென்று கொடுக்கும் மேகத்தினுடையதே யாதல்போல வென்கின்றது.

72. திந்திருணீபல நியாயம்: — திந்திருணீபலம் – புளியம்பழம், நியாயம் – திருஷ்டாந்தம். இது பெரியார் தேகாதிப் பிரபஞ்சத்தோடிருந்தும் அசங்கராயிருத்த லிதுபோலவென்கின்றது. அதாவது: புளியம்பழமானது தான் எந்த ஓட்டினுள்ளிருந்தே பக்குவமாயிற்றோ அதனிடத்துத் தன் பரிபாககாலத்துப் பற்றின்றி யிருத்தல்போலவென்பதாம்.

அநந்தபத்மநாபஸ்வாமி,
காஞ்சீபுரம்.

குருபக்தி.

'குரு' என்னும் பதத்திற்கு அஞ்ஞானம் எனும் அந்தகாரத்தைப் போக்குவோனென்றும், ஞானத்திற்கு முக்கிய அந்தரங்க சாதனம் மஹா வாக்கியாதி சிரவணமாகையால், ஆப்தமொழி யுரைப்போனென்றும் பொருள்படும். இதை விளக்குவாம்:—

பிரயாணிகளிருவர் ஓர் பாலைவனத்தைக் கடக்கும்படி நேர்ந்தது. அச்சமயம் நடுப்பகலானதால், அம்மணல் வெளியின் பாதி செல்வதற்குள்

நாவறண்டு, தண்ணீருக்காக எங்கும் தேடிக் கிடையாததால், தாகத்தால் கண்ணிருண்டு, கால்கள் தடுமாறி, கீழேவிழுந் திறக்குந் தறுவாயி லவர்களிருக்க, அப்பாலையில் மிகுந்த அனுபோகமுள்ள ஓர் புருடன் அங்கே தோன்றி, "குழந்தைகாள்! இதோ, அருகாமையில் ஓர் தடாகம் உளது, அங்குச் சென்றால் உங்கள் தாகமாறிக் களைதீர்ந்து அங்குள்ள மரநிழலில் இளைப்பாறி உங்கள் ஊர் சேரலாம்" என மிகுந்த அனுதாபத்துடன் பகன்றான். இதைக் கேட்ட அவ்விருவரில் ஒருவன் உள்ளம் குளிர்ந்து, அவன் வாக்கைத் தேவ வாக்காக எண்ணி, "ஆபத்துக்காலத்தில் எங்களை ரக்ஷிக்கவந்த கடவுளே! எங்களால் நடக்கக்கூடச் சக்தியில்லையே! நாங்களென்செய்வது?" என்று வருந்த, அவ்வன்னியன், "வருந்தாதீர், நான் உங்களை ஒவ்வொருவராய்த் தூக்கிச் சென்று உங்க ளவாவைத் தீர்ப்பேன்" எனக் கழன்று அருகுற்றனன். இதைக் கேட்டவுடன் பிரயாணிக்குத் தைரியமுண்டாகித் தன்னை ரக்ஷிக்கவந்த புருடனுக்குப் பல பிரிய வசனங்களாலும் தான் கொணர்ந்த பொருள்களாலும் மரியாதைகளாலும் திருப்தி செய்து அன்னவ னுதவிகொண்டு மெல்லெனக் குளஞ் சேர்ந்தனன்.

மற்றவனோ, இவர்களின் சம்பாஷணையைக் கேட்டு மனதில் அவநம்பிக்கைகொண்டு, தன்னை உய்விக்கவந்த புண்ணியனைக் கண்டு மருண்டு, "சிச்சீ, மூடா, அவனை ஏமாற்றித் தனத்தையும் பறித்துக் கொண்டு எங்கேயோ அழைத்துச் சென்று கொன்றது போதாமல் என்னையுமா கொல்லத் துணிந்தாய்? உன்னெண்ணம் என்னிடம் நடவாது. வந்தவழியே செல். நான் வருந்தி யுழைத்துச் சம்பாதித்த இப்பொருள்களிடமே என் தலையைச் சாய்த்து மரிப்பேனேயல்லாது இதை விட்டு ஒரு நிமிஷமும் அப்புறம் அகலேன். வேண்டுமாயின் முன் சென்றவன் தாகமாறி இங்கு வரட்டும். பின்பு பார்த்துக்கொள்வோம். ஆகா! நீயன்றோ கைதேர்ந்த திருடன்! அப்படிப்பட்ட குளிர்ச்சியான இடம் இம்மணற் காட்டில் ஏது? உண்டாயிருந்தால் நீ அங்கேயே சுகமாயிராமல் ஏன் இங்கு மங்கும் அலைந்து எங்களைப்போல் அல்லாடுகிறாய்?" என்றிவ்வாறு அன்னியனின் மனத்தூய்மையையும் ஜீவகாருண்யத்தையும் அறியமாட்டாத அப்பேதை வாயில் வந்தபடி பிதற்றினான்.

(தொடரும்.)

M. V. சுப்ரமண்ய ஐயர்.

காலதேச காரண (நிமித்த)ங்கள்.

சுழுத்தியின் கண்ணே, காண்பான், காட்சி, காட்சிப் பொருளாகிய மூன்று மிருக்கின்றன. இதனையே திரிபுடியென்பர். இதுதான் நிமித்தத்தின் சூக்ஷும ரூபம். இது நிலையாயுள்ளதாலேயே மறுபடி சாக்கிரம் ஏற்படுகிறது.

மேற்கூறிய சூக்ஷும நிமித்தத்திலிருந்து விழிப்பு வரும்விதம் ஈண்டுக் கவனிக்கற்பாலது. சுழுத்தியிற் காண்பவன், முதலிருவவத்தையினுங் காண்பானாகவிருந்த ஆன்மாவே. ஆனால் இங்கிவன் காணுதல், முன் அவத்தைகளிலுள்ள வத்துக்களின் இன்மையாகிய சூனியத்தை. சுபாவத்தில் நமது வீட்டில், நாம் தினமாறு படுத்துறங்கி விழித்தபின்பு, இரவில் நிகழ்ந்தன நமக்குத் தோன்றும். ஒன்றுந் தெரியவில்லையென்னு மநுபவம் நன்கு விளக்கும். இவ்வாறு சிலகாலம் சுழுத்தியிலிருந்து, காய, இந்திய, மன அடக்கத்தால் தேறிப் பின்பு, மனத்துடன் ஆன்மா சம்பந்தப்பட, அதனுட் பொதிந்தவரையிலா எண்ணங்களைச் சுவப்ன ரூபமாய்க் காண்கிறான். இங்கும் ஆத்மா காண்பவனாகின்றான்.

இப்படி நினைவுக ளொன்றன்பின்னொன்றாய்த் திரைபோல் வருவதான், இங்குக் கால உணர்வும், முன்னுள்ள நிமித்த உணர்வும் ஆகிய இவைகள் சம்பந்தப்பட்டு, திடமுண்டாய்விடுகின்றன. பின் காய இந்தியங்களுடன் சம்பந்தமாய்ச் சாக்கிரத்திற்கு வருங்கால், ஒரே காலத்தில் ஒரே சம்பவத்தை வேறாகக் காணவேண்டிவருதல் மூலமாக, தேச உணர்வும், கால காரண (நிமித்த) உணர்வுகளுடன் கூடித் திடப்படுகின்றன. ஆகலின் ஆன்மா காணும்பொருளாய்ச் சேடித்தலான், இதற்கேற்பக் காணும் பொருள்களில், காட்சி ஒழுங்கு அதற்குப் புலப்பட அதனுடன் எப்போதும் காரிய காரண சம்பந்தமாகிய நிமித்தம் இம் மூன்றவத்தையினுள்ளுமுள்ளது. சுழுத்தியிலிக்காரணம், தேச காலங்களினின்றுந் தனித்திருப்பதானும், விளங்குங் காட்சிப் பொருளின்மையாலும் சூக்ஷுமமாயிருக்கின்றது.

தேச கால நிமித்தங்கள் உட்கரண பரிணாமங்களாயினும், நிமித்தம் தேச காலங்களுக்குக் காரணமாயிருக்கின்றது. இதுகொண்டே ஆன்மாவுக்குச் சுழுத்தி யவத்தையில், நிமித்தத்தைக் காரண சரீரமென்றும், கனவிலுள்ள (சொப்னத்திலுள்ள) கால நிமித்தத் தொடர்ச்சியைச் சூக்ஷும சரீரமெனவும், விழிப்பிலுள்ள காலதேச நிமித்த (காரண) சம்பந்தத்தைத் தூலதேகம் எனவும் கூறுப.

இதுவரைக் கூறிவந்த காலதேச (காரண) நிமித்த ரூபமாயும், நிமித்தத்தினை ஆதாரமாக உடையதற்கே மூலப் பிரகிருதி என்று மொழிவர். காலதேச காரணாதீதமான நிலையில், காலதேச வத்து பிரிபடாப் பொருளாயிருந்து சேறியிருப்பதால் ஆன்மா அறிபொருளாகிய கால தேச காரண சம்பந்தமான காட்சிப் பொருளுமன்று. அறியொணாத காலதேச சம்பந்தமற்ற சூனியப் பொருளுமன்று. எல்லாம் அறியும் பொருளாகவிருந்து, உண்மையில் அறியும் பொருள் என்ற உபாதியுமற்ற அறிவு ஸ்வரூபமானதுவே யென்றும், சுழுத்தியிலுள்ள நிமித்தம் பரம் பொருளுக் குபாதி யுண்மையிலில்லையென்றும், மேல் வெளி நின்ற மேலோர் சாலமொழிகின்றனர்.

ஒப்பற்ற வத்துவான இவ்வான்மாவுக்கு இம்மூலப் பிரகிருதி எப்படி வந்ததென ஓரையந் தோன்றலாம். தேசகால காரணத்திற்குக் கட்டுப்பட்டே இக்கடா நிகழுகிறது. நாமும் அதிற் கட்டுப்பட்டவராதலின், இவ்வினாவிற் கிடமில்லை. சுபம்.

சேந்தமிழ்க்கவி, K. V. இராமசந்திர அய்யர்,

திருவண்ணாமலை.

சமாசாரம்.

மின்சாரத்தால் சுத்தஞ்செய்யும் பால்.

இங்கிலாந்திலுள்ள லிவர்ப்பூல் நகர முனிசிபாலிடியார் சிசுக்களுக்கும் குழந்தைகளுக்கும் சுத்தமான பால் கிடைக்கும்படி மின்சார உதவியைக்கொண்டு பாலைச் சுத்தஞ்செய்து கொடுத்து வருகின்றனர். இங்கும் அவ்வாறு செய்யப்படுமாயின் மிகவும் நலமுண்டாவதாம்.

அமெரிக்காவில் ஸ்திரீகளுக்குச் சுதந்தரம்.

ஐக்ய மாகாணங்களைச்சேர்ந்த நாடுகளில் ஒன்றாகிய மெஸ்ஸாசுஸெட்ஸ் என்னும் நாட்டில் பார்லிமெண்ட் போன்ற பிரதிநிதி ஸபைக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்க வோட்கொடுக்கும் பாத்தியம் ஸ்திரீகளுக்கும் உண்டென்று அந் நாட்டுப் பிரதிநிதிச் சபை தீர்மானித்து விட்டது.

ஓர் ஐரோப்பியன் தண்டனையடைந்தான்.

புனாவிலிருந்து பம்பாய்க்கு வந்துகொண்டிருந்த மெயில் வண்டியில் பிரயாணஞ் செய்துகொண்டிருந்த ஒருவரின் வெள்ளிச் சுருட்டுப்

பெட்டியையும் தங்கக் கைக் கடிகாரத்தையும் திருடிய ஹெர்பர்ட் மார்ஷல் என்பவன் பம்பாய் மாஜிஸ்ட்ரேட்டால் 2 வருஷம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டான். இவன் இதற்குமுன் பல முறை தண்டனையடைந்தவன். இவன்மீது இன்னும் இரண்டு திருட்டுக் கேஸ்கள் விசாரணையிலிருக்கின்றன.

மணற்கிணறு.

அமெரிக்காவிலுள்ள ஒரு கிணறு ஜலத்திற்குப் பதிலாக மணலைப் பெருக்கிக்கொண்டிருக்கிறதாம். ஊற்றிலிருந்து நீர்வருவதுபோல அக்கிணற்றிலிருந்து சதா மணல் விரைந்து வந்துகொண்டிருக்கிறது. நூறடி ஆழத்திலிருந்து மணலை உயரச் செலுத்தும் சக்தி யின்னதென்று கண்டுபிடிக்க முடியவில்லை.

கப்பல் விபத்து.

நியூபவுண்ட் லாண்டு எப் 3 நியூபவுண்டு லாண்ட் என்னும் ஒரு வீல்ஸ்டீமர் பனிக்கட்டிகளுக்குள் அகப்பட்டு ஓடமுடியாமற் போயிற்று. அதிலிருந்தவர்களுள் 77 பேர் இறந்துபோனார்கள். வேறு 36 பேர் அபாயகரமான நிலைமையிலிருக்கிறார்கள். இருபதினாயிரம் வீல் மீன்களைப் பிடித்துக்கொண்டு திரும்பிவந்த ஸதான் கிராஸ் என்னும் ஸ்டீமரும் காணப்படவில்லை. அதில் 173 பேர் இருந்தனர். இறந்தவர்களின் பிரேதங்களுள் 69 பிரேதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இது சம்பந்தமாக ஜார்ஜ் அரசர் தமது அநுதாபத்தை நியூபவுண்டுலாண்டு கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்திருக்கிறார்.

விவாகப் பிரிவினை.

ஸ்வீடன்தேசத்து இளவரசரும் இளவரசியும் விவாக சம்பந்தத்தை விலக்கிக்கொண்டனர். இனி இவர்கள் தத்த மிஷ்டம்போன்று வேறு விவாகஞ் செய்துகொள்வார்கள்.

ருஷ்யாவும் ஜர்மனியும்.

ருஷ்யா ஜர்மனியோடு சண்டை செய்யத் தயாராயிருக்கின்றது. அது ஜர்மனியின் ஜன்ம சத்துருவான பிரான்சுக்குப் பெருஞ் சந்தோஷத்தை யுண்டாக்குகின்றதென்று அங்குப் பிரசுரமாகும் பத்திரிகைகளெழுதுகின்றன.